# மெட்ரோ ரயில் நிறுவனத்தில் 5.2 மெ.வாட் சோலார் மின்உற்பத்தி

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், இதுவரை மொத்தம் 5.2 மெகாவாட் அளவுக்கு சோலார் மின்உற்பத்தி செய்துள்ளது.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு சொந்தமான இடங்களில் சோலார் கருவிகள் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் திட்டப்பணிகளை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் எல்இடி விளக்குகளைப் பொருத்துவதுடன், புதுப்பிக்கத்தக்க எரிசக்திகளை பயன்படுத்தி வருகிறது.

மெட்ரோ ரயில் நிலையங்களில் மேற்கூரைகள் உட்பட பல்வேறு இடங்களில் சோலார்கள் கருவிகள் நிறுவப்பட்டு வருகிறது. இதேபோல், கோயம்பேடு மெட்ரோ பணிமனையிலும் சோலார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதோடு, மின்சார கட்டண செலவும் படிப்படியாக குறைந்துள்ளது. முதல் கட்டமாக 6 மெகா வாட் அளவுக்கு சோலார் மின்உற்பத்தியை நிறுவ முடிவு செய்தோம். இதுவரையில் 5.2 மெகா வாட் அளவுக்கு சோலார் கருவிகளை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்து வருகிறோம். மேலும், வரும் ஆண்டுகளில் வாய்ப்புள்ள இடங்களில் கூடுதலாக சோலார் கருவிகளை நிறுவி, மின்சாரத்தை உற்பத்தி செய்யவுள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.